[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 ஆகஸ்ட் 21

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

6. கவன ஈர்ப்பு

(1) மதுரையில் திரு. முத்து, திரு. கதிரவன் கலந்து கொண்ட ஊர்வலத்தின்மீது கல், சோடா புட்டி வீச்சு.

திரு. பெ. மலைச்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியமான காரியம் ஒன்றை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது,

கடந்த 21—7—1968-ம் நாள் மதுரையில் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் திரு. நெடுஞ்செழியன், மேலவை உறுப்பினர் திரு. முத்து, சட்டமன்ற உறுப்பினர் திரு. கதிரவன் ஆகியோர் கலந்து கொண்ட ஊர்வல நிகழ்ச்சியில் குறிப்பிட்ட அரசியல் கட்சியினர் சிலர் ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள்மீது கற்களையும், சோடா பாட்டில்களையும் எறிந்து காயப்படுத்தியதோடு அமைச்சர் போன்றவர்களின் உயிருக்குத் தீங்கும் விளைவிக்க முயன்றுள்ள நிகழ்ச்சிபற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை இப் பேரவை விவாதிக்க வேண்டும்."

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்காசி துணைத் தேர்தல் வெற்றி விழாக் கொண்டாடுவதற்காக 1968 ஜூலை 21-ம் தேதி இரவு, மதுரையில் தி.மு.க. மாபெரும் வெற்றி ஊர்வலம் ஒன்றை நடத்தியது. கல்வித் துறை அமைச்சரும், திருவாளர்கள் கே. எம். கதிரவன், எம்.எல்.ஏ., எஸ். முத்து, எம்.எல்.சி., எஸ்.எஸ். தென்னரசு ஆகியோர் இவ் விழாவில் கலந்துகொண்டனர். விரிவான அளவில் காவலர் பந்தோபஸ்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரவு சுமார் 8 மணி அளவில் ஊர்வலம் வடக்கு மாசி வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, தி.மு.க உறுப்பினர் ஒருவருக்கும் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. காங்கிரஸ் கொடிகளும் தோரணங்களும், தி.மு.க. ஊர்வலத்தினரால் சேதப்படுத்தப்பட்டதாக காங்கிரஸ்காரர் புகார் செய்தார். காவலர் தலையிட்டு அவர்களைப் பிரித்துவிட்டனர். இதற்கிடையில் ஊர்வலத்தில் கடைகோடியில் வந்து கொண்டிருந்த இருவர் காங்கிரஸ்காரர்கள் கல்வீச்சினால் தாங்கள் காயமடைந்ததாகக் கூறினர். பரமேஸ்வரன் பிள்ளை சந்தில் காமராஜர் பிறந்தநாளைக் கொண்டாடிய காங்கிரஸ்காரர்கள் கல் வீசியதாகவும் அவர்கள் கூறினர். காவலர் தக்க சமயத்தில் தலையிட்டு கைகலப்பு எதுவும் நேராமல் தவிர்த்தனர். பின்னர் இரவில் காங்கிரஸ்காரர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட சிலர் இரண்டு இடங்களில் அலங்கார வளைவு கம்பங்களைச் சேதப்படுத்த முயன்றனர். ரோந்து காவலர் அவர்களைத் துரத்திச் சென்று மேற்கொண்டு அத்தகைய

சம்பவங்கள் நிகழாமல் தடுத்தனர். அமைச்சர் கலந்து கொண்ட ஊர்வலம் பொதுக் கூட்டம் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகள் அமைதியாக நடந்தேறின. எந்தவிதமான எதிர்விளைவும் இன்றி நிலைமை அமைதியாக இருக்கின்றது.

(2) வேலையிழந்த இந்தி ஆசிரியர்களின் நிலை.

THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Sir. I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, viz., the plight of Hindi Pandit who are thrown out of their appointment in the State.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மும்மொழித் திட்டத்தை நீக்கிவிட்டு, இருமொழித் திட்டத்தைக் கொண்டு வருவதென்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளதன் விளைவாக, இம் மாநிலத்தில் பல்வேறு நிர்வாகங்களின்கீழ் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் இந்தி ஆசிரியர்களைப் பணியிலிருந்து அகற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தகுதியுள்ள இந்தி ஆசிரியர்களைப் பணியிலிருந்து அகற்ற வேண்டாமென பள்ளிக் கல்வித் துறை இயக்குநருக்கு அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. அவர்களுக்கு எந்த மாற்று வேலைகள் அளிக்கப்பட்டாலும் அவர்கள் பெறும் சம்பளம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. கீழ்க் கண்ட வகை இந்தி ஆசிரியர்கள் தான் பாதிக்கப்பட்டனர். அவர்கள் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததே அதற்குக் காரணமாகும். (1) தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தகுதி பெறு இந்தி ஆசிரியர்கள் (2) பகுதி நேர இந்தி ஆசிரியர்கள்.

உள்ளாட்சி நிறுவனங்களின்கீழ் உள்ள பணியாளர்களுக்குப் பொருந்தும் விதிகளின்படி, தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் பணிகள், எந்த அறிவிப்பும் கொடுக்கப்படாமல் அல்லது எந்தக் காரணமும் காட்டப்படாமல் எந்தச் சமயத்திலும் குறிப்பாகப் பள்ளியாண்டின் முடிவில் இறுதி செய்யப்படும். அத்தகைய தற்காலிக இந்தி ஆசிரியர்களின் பணிகளை இறுதி செய்ய ஏற்கெனவே உள்ள விதிகளின் கீழ்ச் சில மாவட்டக் கல்வி அதிகாரிகளும் மகளிர் பள்ளிகளின் ஆய்வாளர்களும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது. தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள, ஆனால் தகுதி பெற்றுள்ள அத்தகைய ஆசிரியர்களுக்குக்கூட மாற்று வேலை அளிக்கும்படி அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு மகளிர் பள்ளிகளின் ஆய்வார்களுக்கும் பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் தேவையான கட்டளைகளைப் பிறப்பித்துள்ளார்.